[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

சென்னையில் தீ விபத்துக்களும் நிவாரண வேலைகளும்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : *நகரத்தில் அண்மையில் நடைபெற்ற இரு தீ விபத்துக்கள் காரணமாக மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவரவர்களும், டாக்டர் ஹண்டே அவர்களும், திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களை தீர்மானத்தின் வாசகத்தை மட்டும் படித்துவிடுமாறு நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.*

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, I have given notice of the following adjournment motion—

"That the House do stand adjourned to discuss a matter of urgent public importance, viz., the continued fire accidents taking place daily in the Madras City, the causes for the same and the reliefs afforded to the victims."

சென்னையிலே துரதிருஷ்டவசமாக நாள் தவறினாலும் இந்தத் தீ விபத்துக்கள் தவறாமல் இருப்பதில்லை. மேலும், நேற்று ஏற்பட்ட தீ விபத்திலே மூன்று பேர் இறந்து விட்டார்கள் . . .

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : *தீர்மானத்தைப் படித்துவிட்டுப் பேச வேண்டியதில்லை. படித்துவிடுவதோடு நிறுத்தி விடுங்கள். அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்குப் படித்துவிட்டு, அந்த அளவோடு நிறுத்திக்கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவரவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.*

DR. H. V. HANDE : Hon. Deputy Speaker, Sir, I have given notice of a motion for an adjournment of the business of the Assembly for discussing definite matter of urgent public importance, namely:—

"to discuss relief measures for above 2,000 inhabitants rendered homeless on account of the blaze of fire which has destroyed nearly 500 huts in Appadurai Naicken Thottam and Patnoolkaran Thottam and Mundakanniamman Koil Thottam in Division 83 in Mylapore.

These poor people have lost all their belongings and cannot cook or live in the open. This is the third fire accident that has overtaken the City within the short duration of 48 hours. The Corporation is unable to cope up with the magnitude of relief and rehabilitation measures that the situation demands. Though it may be argued that this subject may be discussed during the Appropriation Bill, I urge the Deputy Speaker to allow an adjournment of the House to discuss immediately some concrete relief measures that the State Government may be constrained to undertake such as cash benefits, supply of food packets, supply of asbestos sheets, etc. and also a detailed programme to rehabilitate these homeless persons in a permanent way so that they will not be frequent victims of such fire disasters. Sir, I therefoul, request you to adjourn the business of the House."

திரு. வி. கே. கோதண்டராமன் : *சார், சென்னை மைலாப்பூரில் ஏற்பட்ட இதுவரையில்லாத மிக பயங்கரமான தீ விபத்தில் 1,000 குடிசைகளுக்கு மேல் தீப்பிடித்து அழிந்ததைப் பற்றியும், ஆயிரக்கணக்கான பேர்கள் துணிமணியில்லாமலும், உணவு இல்லாமலும் நிராதரவாக தவிக்கும்*

1967 ஜூலை 4]

மிக மோசமான நிலையிலுள்ள நபர்களுக்கு உடனடியாக உதவி புரிய வேண்டிய அவசியத்தைப்பற்றியும், மேலும் மத்திய சர்க்காருக்குத் தெரியப் படுத்தி அதற்கான உதவியைப் பெறுவதைப் பற்றியும் விவாதிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவரவர்களே, எல்லோரும் கவலைப்படத்தக்க விதத்தில் இரண்டு நாட்களாக சென்னையில் இருவேறு இடங்களில்—மூன்று இடங்கள் என்று கூடச் சொல்லலாம், ஏற்பட்ட இந்த தீ விபத்துக்களுக்கு என்னென்ன நிவாரணங்கள் அளிக்கலாம் என்பது பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கையை ஒத்தி வைக்க வேண்டுமென்று நண்பர்கள் விரும்புகிறார்கள். அதற்கான நடவடிக்கைகள் துரிதமான முறையில் இப்பொழுது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. தீ விபத்தினாலே பாதிக்கப்பட்டவர்கள், வீடிழந்தவர்கள் வேறு இடங்களுக்குச் சென்று தற்காலிகமாக இருப்பதற்கு இடம் வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கார்ப்பொரேஷன் மூலம் இந்த இரண்டு, மூன்று நாட்களுக்குச் சாப்பாடு வசதி செய்யப்பட்டு வந்திருக்கிறது. பல்வேறு பொதுநல ஸ்தாபனங்கள் தாங்கள் தாங்களாகவே இதிலே உதவி அளித்துக்கொண்டு வருகிறார்கள். சர்க்காரிடத்தில் உள்ள விதிமுறையின்படி வீடிழந்தவர்களுக்கு உதவித் தொகை கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. இவைகளையெல்லாம் மனதில்கொண்டு, என்னென்ன செய்யலாம் என்பதைப்பற்றி விவாதிக்க நம்முடைய சபையை ஒத்திவைப்பதைவிட, சபை இல்லாத நேரத்தில் உறுப்பினர்கள் இதிலே அக்கறை காட்டுவார்களேயானால் உண்மை நிவாரணம் அந்த மக்களுக்குக் கிடைக்கக்கூடிய வகையில் இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு, இதுகுறித்து இந்த பேரவையின் நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டிய தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இதைப்பற்றி விவாதிக்க இந்தப் பேரவையின் நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டிய தேவையில்லை என்று கருதி இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை நான் நிராகரிக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

தஞ்சை மாவட்டத்தில் கால்நடைகளுக்குப் போதுமான வைத்திய வசதியின்மை.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : அடுத்து சபை 41-வது விதியின் கீழ் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களுக்கு ஒரு கருத்து ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : கனம் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி தாலூகாக்களில் கால்நடைகளுக்குப் போதுமான வைத்திய வசதி இல்லாது ஆயிரக் கணக்கான கால்நடைகள் நோய்கண்டு இறக்கின்ற காரணத்தால் அப்பகுதி விவசாயிகள் பெரும் நட்டத்திற்கு உள்ளாகியிருப்பதால் கால்நடைகளுக்கு நோய் பரவாவண்ணம் தடுக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டிய காரியத்தைப்பற்றிக் கனம் அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு வட்டத்திலுள்ள வடசேரி கிராமத்தில் கால்நடைகளுக்கு வெக்கை நோய் கண்டுள்ளதாக 20—5—1967-ல் முதலில் தெரிய வந்தது. இந்நோய் பெருவாரியாகப் பரவத் தொடங்கியது; இந்நோயைத் தடுக்கத் தடுப்பு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன. இந்நோய், வெக்கை நோய் என்று பின்னர் உறுதிப் படுத்தப்பட்டு, அருகிலுள்ள கிராமங்களில் இருக்கும் கால்நடைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மன்னார்குடி, ஒரத்தநாடு, பட்டுக்